Balu Forge Industries reports strong results with 66.9% jump in PAT

Chennai, Aug 11:
Balu Forge Industries reports strong Q1 FY26 results with a 33% YoY revenue increase to Rs.2,332 Mn and a 66.9% jump in PAT to Rs.570 Mn, driven by efficiency and market share gains.

Revenue from operations rose 33% YoY to Rs.2,332 Mn, driven by a richer value-added product mix and higher operating leverage as the company scaled capacity and capability.

Gross profit surged 50.1% YoY to Rs.891 Mn, supported by improved product complexity and expanding precision engineering applications.

EBITDA grew 67.3% YoY to Rs.723 Mn, reflecting enhanced manufacturing efficiencies and the benefit of integrated high-margin machining.

Profit after tax jumped 66.9% YoY to Rs.570 Mn, underpinned by margin expansion, stable cost control, and continued gains in global market share despite external uncertainties.

Jaspal Singh Chandock, Executive Director of BFIL said 'As we look ahead, apart from boosting our capacity, we are reinforcing our position as a global precision engineering powerhouse from India. With a strong foundation, advanced infrastructure, and a clear strategic vision, we are poised to capture the emerging opportunities and shape the future of precision engineering.'

IDFC First Bank launches zero-fee remittance platform for NRIs

Coimbatore., Aug 11:
IDFC FIRST Bank has introduced **RemitFIRST2India**, a digital remittance platform enabling NRIs to send money to India quickly, securely, and without transfer fees. Available via the bank's mobile app for customers and through a paperless web portal for non-customers, the service is powered by SingX and currently supports transfers from Singapore and Hong Kong, with plans to expand.

Key features include zero transfer fees, competitive forex rates, real-time transaction tracking, and special welcome benefits for new users.

Ashish Singh, Head of Retail Liabilities, said the platform reflects the bank's customer-first approach, offering speed, transparency, and security. SingX CEO Atul Garg highlighted the growing NRI remittance trend, noting the platform's role in making fund transfers to India smoother and more cost-effective.

Tata Motors to supply 100 magna EV intercity coaches to green energy mobility solutions

Chennai, Aug 11:
Tata Motors, India's largest commercial vehicle manufacturer, has signed an MoU with Green Energy Mobility Solutions Pvt. Ltd. (GEMS) -the electric mobility arm of Universal Bus Services (UBS) -to supply 100 advanced Magna EV intercity coaches. The agreement was formalised at Passenger Vehicle Expo 2.0 in Chennai, where Tata Motors is displaying its latest passenger mobility range, including the all-electric Magna EV and the LPO 1822, built for high performance, passenger comfort, and optimal total cost of ownership.

UBS, a leading premium intercity travel brand in South India, is expanding into sustainable mobility through GEMS, which will deploy electric buses and charging infrastructure. The signing ceremony was attended by Dr. T.R.B. Rajaa, Hon'ble Minister for Industries, Government of Tamil Nadu, state officials, and members of the All Omni Bus Owners Association (AOBOA).

Dr. Rajaa said, "Tamil Nadu continues to lead in automotive and clean mobility innovation. This partnership between Tata Motors and UBS will deliver greener, safer public transportation and strengthen our sustainable transport ecosystem."

Sunil Kumar Ravindran, Managing Partner, UBS, and Director, GEMS, added, "Our move to Magna EV coaches marks a milestone in our shift to electric intercity travel. These buses will provide quieter, more comfortable journeys, reduce costs, and cut emissions—reinforcing our commitment to sustainability."

Anand S, Vice President & Head - Commercial Passenger Vehicle Business, Tata Motors, said, "The Magna EV, developed through customer feedback and rigorous testing, will redefine long-distance travel in India with unmatched comfort, efficiency, and sustainability."

The Tata Magna EV offers a 44-seater configuration, up to 300 km range per charge, and features such as ergonomic seating, Electronic Braking System (EBS), and Electronic Stability Control (ESC).

Tata Motors currently leads India's electric bus segment, with over 3,600 e-buses operating in 11 cities and clocking more than 34 crore kilometres at over 95% uptime. Its electric portfolio spans the Starbus EV and Ultra EV for intra-city, and the Magna EV for intercity travel, all integrated with Fleet Edge, the company's real-time vehicle tracking and diagnostics platform.

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS
(TESTAMENTARY AND INTESTATE JURISDICTION)
O.P.No. 275 of 2024

In the matter of the Indian Succession Act XXXIX of 1925 AND
In the matter of Last Will and Testament Of Late Mrs.D.Prema deceased

1.P.Yasodha, W/o. Late Palani,
2. M.P.Ramanujam, S/o.M.Pakkirisamy,
Both residing at
Plot No.6, F2, Govindasamy Nagar,
10th Street, Madipakkam, Chennai-600 091. ...Petitioners

-Vs-

1. P.Selvadurai, S/o.Late M.Pakkirisamy
2. Srinivasan, C/o. P.Selvadurai
3. Vitta Bai, C/o. P.Selvadurai
4. Lakshmi, C/o. P.Selvadurai
All residing at
No.26A, S4, 2nd Floor, EB Colony Main Road,
Near Balasaravana School,Adambakkam
Chennai-600 088. ...Respondents/Respondents

To,
Common Public whom all are concerned.
Sir/Madam,

Sub: Paper publication for Common Public ordered by Hon'ble High Court of Judicature at Madras in O.P. No. 275 of 2024, Mrs.P.Yashodha and another -Vs-Mr.P.Selvadurai and others.

Whereas the above named Petitioners has filed the above O.P.No.275 of 2024. Praying to Probate the Last Will of the deceased D.Prema dated 08.06.2021 and seeking Letter of Administration of the Estates of Deposits in Various Bank Accounts and Golden ornaments belonging to D.Prema and other Relief as prayed. The above said Hon'ble Court which was came up for hearing and after hearing the petition Ordered Paper Publication in any Tamil News Daily returnable on or before 12.08.2025.

Kindly Take notice those who Concerned with the any issue in this matter shall appear before the above said Hon'ble High Court at Madras on 19.08.2025 at 10.30 A.M, and to raise objection if any, either in person, or Advocate or Through Pleader, or otherwise the matter would be decided in your absence.

R.BALAGURUSWAMY
Counsel for Petitioners

Regd No. 4734 of 1962 Phone No.26570952, 26571952

The Ambattur Saswatha Nidhi Limited,
No.2,Ramachandran street, Venbkatapuram,Ambattur,Chennai-53.

NOTICE

To
The Share Holders,

Notice is hereby given that the 63rd Annual General Body Meeting of the share holders will be held On Tuesday the 09th September 2025 at Venkatalakshmi Kalyana mandabam, West park street, Venkatapuram, Ambattur, Chennai -53. at 9.30 a.m to transact the following:

1. To receive and adopt the Audited Balance sheet, profit and loss Account as on 31 st March 2025 Together with Auditor and Directors report.
2. To Declare dividend for the year 2024-2025.
3. Thiru.V.A.Janardhan Who is retiring on 14.10.2025)
As per Govt order (GSR 555-21.07.2001)
4. To elect a director in the place of Sri.S.Karunanithi who is retiring by rotation and he is eligible for re-election.
5. To apoint auditor to audit the Accounts for the year 2025-2026 and to fix his remuneration M/s P. Jayaraman & co offer themselves.

/ by order of the Board /
Dated : 07.08.2025 V.A.Janardhan
Place : Chennai-53. Director/Secretary.

Tide empowers SMEs to earn more with launch of fixed deposits

Chennai, Aug 11:
Tide, the leading business management platform for SMEs, announced the launch of Fixed Deposits (FDs) on its app, which will help small businesses to earn competitive returns on their balances in a seamless and paperless experience. This new offering supports Tide's commitment to helping SMEs better manage their finances, grow capital efficiently, and build stronger financial foundations.

With interest rates of up to 8.84%* per annum and tenure options ranging from 7 days to 60 months, SMEs can now invest idle working capital into high-yield, fixed-return instruments starting at just Rs.1,000. Unlike other offerings in the market, FDs offered by Tide require no complex paperwork - meaning entrepreneurs can book, manage, and track their investments directly within the Tide app.

Through its partnership with RBI-regulated banks and NBFCs such as Suryoday Small Finance Bank, Bajaj Finance Ltd., Mahindra Finance and others, Tide aims to provide security for fixed deposits made on its platform.

According to RBI data, over 85% of SME funds remain in low-yield current accounts. Simultaneously, the CRISIL SME Insight Report (2022)1 notes that more than 60% of SMEs prefer fixed-return instruments due to their low-risk appetite. Tide's new FD feature is designed to address these gaps, enabling SMEs to earn predictable returns along with ease of access to their investments.

Gurjodhpal Singh, CEO, Tide India commented, "A large portion of SME funds in India lie idle in current accounts, earning little to no interest. At Tide, we believe that helping small businesses unlock the value of their surplus funds is a step towards true financial empowerment. Our Fixed Deposit offering simplifies this journey with instant booking, flexible tenure, and full integration within the Tide platform."

India's financial inclusion schemes connecting millions to mainstream

Chennai, Aug 11:
The government's financial inclusion schemes -- from Pradhan Mantri Jan Dhan Yojana (PMJDY) to MUDRA and the quintessential UPI-based digital payments -- are shifting India's growth story from being metro-centric to truly national, according to a report on Monday.Movie script writing courses

According to Prime Minister Narendra Modi, "Economic growth cannot only be restricted to a few cities and a few citizens. Development has to be all-round and all-inclusive."

"In practice, that inclusivity has been driven not just by rhetoric, but by the deliberate weaving of policy, technology, and community outreach into an unprecedented net of access," according to the report in India Narrative.

Launched in 2021, the Financial Inclusion Index is built on 97 indicators spanning banking, insurance, pensions, investments, and postal services.

Its three sub-indices -- Access, Usage, and Quality -- measure not just the spread of infrastructure, but whether people actually use financial products, and whether they understand them.

"The implementation has been startling in its scale. The Pradhan Mantri Jan Dhan Yojana (PMJDY) alone has brought 55.98 crore (560 million) people into the formal banking system, over half of them women. A network of 13.55 lakh (1.35 million) 'Bank Mitras' -- local banking correspondents -- now brings services to remote hamlets," according to the report.

Women hold the majority of Jan Dhan accounts. The Atal Pension Yojana now counts 48 per cent of its subscribers as women.

Moreover, UPI is now behind 85 per cent of all digital transactions in the country, and nearly half of global real-time digital payments.

The daily UPI-based transactions have crossed 700 million for the first time, touching 707 million, according to the latest National Payments Corporation of India (NPCI) data. The feat was achieved on August 2. Over the past two years, the number of daily transactions has doubled, even though growth has slowed down in comparison to previous years.

However, rural households now embracing mobile banking are also more vulnerable to digital fraud. Keeping this in mind, the financial literacy push increasingly focuses on fraud prevention and grievance redressal.

Credit schemes like MUDRA and Stand Up India explicitly aim at SC, ST, and women entrepreneurs.

"The Mahila Sammriddhi Yojana trains women in craft skills and organises them into self-help groups with access to credit. The Kisan Credit Card, now serving over 7.7 crore farmers, reduces dependence on informal moneylenders and strengthens agricultural productivity," according to the report.

The World Bank's Global Findex 2025 now places account ownership in India at 89 per cent - up from just 35 per cent in 2011.

Govt backs RIR Power Electronics' SiC semiconductor project

Chennai, Aug 11:
The Electronics & Information Technology Department, Government of Odisha, has approved Phase 1 fiscal support for RIR Power Electronics Limited's Silicon Carbide (SiC) semiconductor manufacturing facility in the state. The Odisha Computer Application Center (OCAC), the department's nodal agency, has cleared and notified the fiscal support agreement for pro-rata disbursement of the capital subsidy.

The project, approved by the State-Level Single Window Clearance Committee (SLSWCC) and the state cabinet last fiscal year, carries a total investment of Rs.618 crore for both Phase 1 and Phase 2.

Project Financials: Total Project Cost: Rs.618 crore, Capital Expenditure (incurred): Rs.65 crore, Eligible Govt. Capital Subsidy: Rs.32 crore

Expressing gratitude, Dr. Harshad Mehta, Chairman & Director of RIR Power Electronics Limited, said: "We extend our sincere gratitude to the Government of Odisha for their forward-thinking support in helping bring this first-of-its-kind SiC semiconductor facility to life. Their backing empowers us to introduce advanced technologies and modern manufacturing capabilities to the state, laying the foundation for innovation, employment, and energy-efficient solutions in EVs, renewables, power electronics, and industrial automation across India."

This milestone strengthens RIR Power Electronics' vision to emerge as a leading Indian player in high-power semiconductor manufacturing under the Make in India initiative. The facility will produce high-power SiC MOSFETs, IGBTs, and diodes (3.3 kV to 20 kV) for industries including Electric Vehicles (EVs), Renewable Energy & Power Grids, Power Electronics, Industrial Automation.

KKV AGRO POWERS LIMITED
CIN: L40108TZ2012PLC018332
Reg. Office: Vivagaa Building, No. 637, Oppanakara Street, Coimbatore, Tamil Nadu – 641001
Email: cs@kkvagropowers.com Ph. No.: 7418598886, 0422-6800000
Website: www.kkvagropowers.com

NOTICE OF 13TH ANNUAL GENERAL MEETING AND E-VOTING

NOTICE is hereby given that:

1. The 13th Annual General Meeting of the Members of M/s. KKV Agro Powers Limited (CIN: L40108TZ2012PLC018332) will be held on Tuesday, the 2nd day of September, 2025 at 11:00 A.M., through Video Conferencing / Other Audio Visual Means, at the deemed venue at the registered office of the company situated at Vivagaa Building, No. 637, Oppanakara Street, Coimbatore, Tamil Nadu – 641001, in accordance with the General Circulars issued by the Ministry of Corporate Affairs.
2. Electronic copies of the 13th AGM and Annual Report for FY 2024-25 have been dispatched to all the members whose email IDs are registered with the company as on the cut-off date, 08.08.2025, and the dispatch has been completed on 11.08.2025.
3. The company is pleased to provide the facility for remote e-voting to the shareholders to vote on the resolutions.
4. The remote e-voting period begins on 30.08.2025, Sunday at 09:00 A.M. and ends on 01.09.2025, Tuesday at 05:00 P.M. The remote e-voting module shall be disabled by NSDL for voting thereafter.
5. The Members, whose names appear in the Register of Members / Beneficial Owners as on the Record Date (cut-off date) i.e. 26.08.2025 may cast their vote electronically, in proportion to their share in the paid-up equity share capital of the Company as on the cut-off date.
6. The detailed instructions for e-voting in the AGM as issued by the RTA are attached to the Notice of AGM.
7. Any person who acquires shares and becomes the member of the company after the dispatch of notice may obtain the login ID and password by sending an email request at cs@kkvagropowers.com or enotices@in.mpms.mufg.com.
8. The Members may note that:

a. Remote e-voting shall not be allowed beyond 01.09.2025, Tuesday at 05:00 P.M.
b. Electronic ballot facility shall be made available at the 13th AGM. The e-ballot shall be open to those shareholders who are present in the meeting and who have not cast their votes through remote e-voting facility. The e-ballot facility will remain open for 15 minutes after the conclusion of the proceedings of the meeting.
c. A member may participate in the general meeting even after exercising his right to vote through remote e-voting but shall not be allowed to vote again in the meeting.
d. A person whose name is recorded in the register of members or in the register of beneficial owners maintained by the depositories as on the cut-off date only shall be entitled to avail the facility of remote e-voting as well as voting in the general meeting.

9. The Notice of the meeting and Annual Report is available in the website of the company at www.kkvagropowers.com and the website of the stock exchange at www.nseindia.com.
10. The shareholders may write to CS Kavya Das R, Company Secretary and Compliance Officer of the company at cs@kkvagropowers.com or Vivagaa Building, No. 637, Oppanakara Street, Coimbatore, Tamil Nadu – 641001, or call at 0422-6800000

For and on behalf of KKV Agro Powers Limited
11.08.2025 CS Kavya Das R
Coimbatore Company Secretary and Compliance Officer

Is rally over for long-duration bonds?

India's long-duration government securities have delivered exceptional returns over the past 12-15 months, driven by falling yields, compressed spreads, fiscal discipline, and strong demand-supply support. But with spreads widening post the June policy and key tailwinds fading, the question now is whether this rally has run its course.

What Drove the Rally?

Macro Slowdown & Policy Easing - Slower growth, falling inflation, and 150 bps in rate cuts (including a surprise 50 bps in June 2025) boosted bond prices.

Fiscal Consolidation - Deficit fell from 9% during COVID to 4.4%, with stable borrowings.

Tactical Demand-Supply Boost - RBI's Rs.5 lakh crore OMO purchases and $22 bn FPI inflows, especially after JP Morgan index inclusion, lifted demand.

Why the Tailwinds Are Fading

Rate Cuts Nearing End - RBI's neutral stance signals only limited further easing.

Fiscal Tightening Limits - Weak tax revenues, 8th Pay Commission, and rising borrowings may strain the market.

Dwindling Tactical Support - Liquidity surplus, no major OMOs expected, and FPI outflows reduce demand.

Market Signals: Spreads Widening

Long bond spreads have risen from ~35 bps to ~70 bps since June, mirroring

patterns seen late in previous rate-cut cycles. FY26 could see a demand-supply mismatch as over 40-50% of new issuance will be in 15+ year maturities, while changes in HTM norms, NPS allocations, and FPI restrictions curb buying appetite.

Yield Resistance

30-year bond yields have historically held above 6.75% since inflation targeting began, suggesting limited room for further downside.

Investor Strategy

Long-term Liability Investors - Can still hold long bonds, tolerating volatility.

Mutual Funds & Tactical Players - Consider shifting to short-duration or accrual strategies; 2-5-year corporates offer better risk-reward.

Risks to This View

Sharper-than-expected rate cuts if growth falters.

Fresh FPI inflows via Bloomberg index inclusion.

Without fresh catalysts, the structural rally in long bonds is largely over, though short tactical opportunities remain.

Devang Shah, Head - Fixed Income, Axis Mutual Fund

* உடுமலைப்பேட்டையில் நடந்த விழாவில் 31 புதிய திட்டங்களுக்கு அடிக்கல்
* 20 ஆயிரம் பேருக்கு ரூ.295 கோடி நலத்திட்ட உதவி

விரக்தியின் உச்சியில் இருக்கிறார் எடப்பாடி

மேற்கு மண்டலத்தில் இருந்து அ.தி.மு.க. தோல்வி துவங்கும்: முதல்வர் ஸ்டாலின் பேச்சு

உடுமலைப்பேட்டை, ஆக.11– எடப்பாடிக்கு அடிமேல் அடி விழுகிறது. எனவே விரக்தியின் உச்சத்துக்கு அவர் போய் விட்டார் என்று ஸ்டாலின் கூறினார்.

எடப்பாடியின் எந்த சதித்திட்டமும் நம்முடைய அரசின் சாதனைகள் முன்னால் எடுபடவில்லை. இனியும் எடுபடாது என்றும் அவர் கூறினார்.

மேற்கு மண்டலத்தில் இருந்து தான் அண்ணா தி.மு.க.வின் தோல்வி துவங்கும் என்றும் அவர் கூறினார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் நடைபெற்ற அரசு விழாவில், 949 கோடியே 53 லட்சம் ரூபாய் செலவில் 61 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 182 கோடியே 06 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 35 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 295 கோடியே 29 லட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை 19,785 பயனாளிகளுக்கு வழங்கினார்.

விழாவில் ஸ்டாலின் பேசியதாவது:–

10 ஆயிரத்து 491 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சிப் பணிகள், நலத் திட்ட உதவிகள், திருப்பூர் மாவட்டத்திற்கு செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வளவு சாதனைகளையும், 4 ஆண்டுகளில் திருப்பூருக்காக நாம் செய்திருக்கிறோம். ஆனால், அண்ணா திமுக ஆட்சியில் திருப்பூரின் வளர்ச்சிக்காக குறிப்பிட்டு சொல்லும்படியாக ஏதாவது செய்திருக்கிறார்களா?

எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி இந்த பகுதிக்கு வந்தால் மட்டும் தன்னை மேற்கு மண்டலத்துக்காரர் என்று சொல்லிக் கொள்கிறார். ஆனால் உறுதியோடு சொல்கிறேன் பழனிசாமியின் ஆட்சிக் காலத்தை விட, திராவிட மாடல் ஆட்சியில்தான் மேற்கு மண்டலத்தின் அனைத்துத் துறை வளர்ச்சிக்கு அதிக திட்டங்கள், சாதனைகள் செய்யப்பட்டிருக்கிறது

தொடர்ந்து செய்யப்பட்டும் தொடர்ந்து செய்து கொண்டே இருப்போம் இன்னும் தொடர்ந்து நாங்கள் தான் செய்து கொண்டு இருப்போம். அதில் எந்த மாற்றமும் கிடையாது.

அதனால் தான் சொல்கிறேன், எந்த தைரியத்தில் எதிர்க்கட்சித் தலைவர் இந்த பகுதியில் இருந்து தன்னுடைய பிரசாரத்தை தொடங்குவார் என்று எனக்குப் புரியவில்லை. ஆனால், நிச்சயமாகச் சொல்கிறேன் அண்ணா திமுகவின் 2026 தேர்தல் தோல்வி இங்கே இருந்துதான் தொடங்கப் போகிறது.

பொய்களை கத்திகத்தி பேசுகிறார்

ஏற்கனவே, 2024 தேர்தல், உள்ளாட்சி தேர்தல், இடைத்தேர்தல்களில் இந்த மண்டலத்திலிருந்து தான் அவர் தோல்வியை பார்த்துவிட்டார். அதுதான் வருகின்ற சட்டமன்றத் தேர்தலிலும் அது தொடரப் போகின்றது. ஊர் ஊராக சுந்தரம் டிராவல்ஸ் பஸ்ஸில் சென்று, பொய்களை கத்தி கத்தி உரக்கப் பேசினால், தன்னுடைய அலங்கோல ஆட்சியை மக்கள் மறந்துவிட்டு, இவர் பேசுவதை எல்லாம் நம்புவார்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார். ஆனால், அவர் ஆசையில் மண் விழுகின்ற மாதிரி, உங்களுடன் ஸ்டாலின், நலம் காக்கும் ஸ்டாலின் என்று நம்முடைய அரசின் திட்டங்கள் மக்களிடம் பெரிய 'ஹிட்' ஆகிவிட்டது.

அந்த வயிற்றெரிச்சலில் தான், தி.மு.க. அரசு மேலும், மேலும் ஸ்கோர் செய்துவிடக் கூடாது மக்களுக்கு நன்மை நடந்திடக் கூடாது என்று மக்கள் நலத் திட்டங்களுக்கு தடை விதிக்க நீதிமன்றம் சென்றார்! ஆனால், நீதிமன்றம் என்ன சொன்னது? அரசியல் காழ்ப்புணர்ச்சியை தீர்த்துக் கொள்வதற்கு நீதிமன்றத்தை நாடுவது தவறு என்று சொன்னது மட்டுமல்ல, நம்முடைய அரசுக்கு முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் 10 லட்சம் ரூபாய் நன்கொடை தருவது போல உச்சநீதிமன்றம் 'ஃபைன்' போட்டு அனுப்பிவிட்டார்கள்.

இது உங்களுக்கு அவமானமாக இல்லையா? அதுமட்டுமல்ல, பொருளாதார வளர்ச்சியில் இந்தியாவிலேயே பெஸ்ட் மாநிலம் தமிழ்நாடு தான் என்று, நாங்கள் சொல்லவில்லை அவர்களின் கூட்டணியில் இருக்கின்ற ஒன்றிய பா.ஜ.க. அரசே அறிக்கையை வழங்கியிருக்கிறார்கள்.

விரக்தியின் உச்சத்தில்...

இப்படி தொடர்ந்து அவருக்கு அடி மேல் அடி விழுகிறது. இதனால், விரக்தியின் உச்சத்துக்கே எதிர்க்கட்சித் தலைவர் போய்விட்டார். அதனால்தான், முதலமைச்சர் என்கின்ற மக்கள் அளித்த பொறுப்புக்குக் கூட மரியாதை தராமல், தரம் தாழ்ந்து என்னை ஒருமையில் பேசிக் கொண்டு வருகிறார்.

அதைப் பற்றியெல்லாம் நாம் கவலைப்படவில்லை. இன்னும் பேசுங்கள்; இன்னும் இறங்கிப் பேசுங்கள். நான் அதைப் பற்றி கவலையேபடவில்லை. எங்கள் பணி, மக்கள் பணி. உங்களுக்கெல்லாம் பதில் சொல்லி, என்னுடைய நேரத்தை நான் வீணடிக்க விரும்பவில்லை. என்னைப் பொறுத்தவரைக்கும், பேச்சைக் குறை – செயலில் மட்டுமே காண்பிக்கவேண்டும்.

சதி திட்டங்கள் எடுபடாது

ஏதோ தன்னை எம்.ஜி.ஆர்., என்று நினைத்துக் கொண்டு, ஜெயலலிதா அம்மையார் மாதிரி நினைத்துக் கொண்டு சவுண்டு விடுகிறார். ஆனால், பாவம் அவருக்குத் தெரியவில்லை. அவருடைய வண்டி கிளம்பியதும், சொந்த கட்சிக்காரங்களே என்ன கமெண்ட் அடிக்கிறார்கள் என்று அவருக்குத் தெரியவில்லை. அவருடைய எந்த சதித் திட்டமும் நம்முடைய அரசின் சாதனைகள் முன்னால் எடுபடவில்லை, இனியும் எடுபடாது.

திராவிட மாடல் அரசைப் பொறுத்தவரைக்கும், ஒவ்வொரு மாவட்டத்துக்கும் தேவையானவற்றைப் பார்த்துப் பார்த்து நாம் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்.

அனைவருக்குமான நல்லாட்சியை நடத்திக் கொண்டு வருகிறோம். இந்த நல்லாட்சி எந்நாளும் தொடரவேண்டும் என்றுதான் மக்களாகிய நீங்கள் விரும்புகிறீர்கள். இந்த நல்லாட்சி எந்நாளும் தொடரும். உங்கள் விருப்பங்கள் எல்லாம் நிறைவேறும். திராவிட மாடல் 2.0ல் இதுவரை அடையாத புதிய உச்சங்களை தமிழ்நாடு நிச்சயம் அடையும்! இது உறுதி! உறுதி! உறுதி!

இவ்வாறு ஸ்டாலின் பேசினார்.

இந்த விழாவில், அமைச்சர்கள் சு.முத்துசாமி, மு.பெ. சாமிநாதன், அர. சக்கரபாணி, என்.கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி, திருப்பூர் மாவட்ட கலெக்டர் மனிஷ் நாரணவரே, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக 15 வேலம்பாளையத்திலிருந்து அமைச்சர் மா. சுப்பிரமணியன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் கே. செல்வராஜ், திருமுருகன்பூண்டி நகராட்சியிலுள்ள திருப்பூர் மினி டைடல் பூங்காவிலிருந்து அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரிக்கு நாளை எடப்பாடி பழனிசாமி வருகை: தொண்டர்களுக்கு அசோக்குமார் எம்எல்ஏ அழைப்பு

கிருஷ்ணகிரி, ஆக. 11– கிருஷ்ணகிரிக்கு நாளை வருகை தர உள்ள அண்ணா திமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை வரவேற்க பெரும் திரளாக தொண்டர்கள் கலந்து கொள்ள வேண்டும் என, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் அசோக்குமார் எம்.எல்.ஏ., கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

நாளை (ஆக. 12) அண்ணா திமுக பொதுச் செயலாளரும், தமிழக சட்டமன்ற எதிர்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்திற்கு வருகை தர உள்ளார். ஓசூரில் இருந்து மாலை 4.30 மணிக்கு புறப்பட்டு சூளகிரி தேசிய நெடுஞ்சாலை வழியாக, கிருஷ்ணகிரி புதிய பஸ் ஸ்டாண்டு, டி.பி.ரோடு, காந்திசிலை வழியாக வருகை தந்து, அரசு மருத்துவமனையில் இருந்து நடைபயணம் மேற்கொண்டு ரவுண்டானா வாசவி கேப் அருகில், மாலை 5 மணிக்கு உரையாற்றுகிறார். மேலும், 7.30 மணிக்கு, பர்கூர் எம்.ஜி.ஆர்., சிலை அருகிலும், 8.30 மணிக்கு, ஊத்தங்கரை எம்.ஜி.ஆர்., சிலை அருகிலும் உரையாற்ற உள்ளார்.

எனவே இன்னாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் சார்பமைப்பு நிர்வாகிகள், கிளை பொறுப்பாளர்கள், கட்சித் தொண்டர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

புத்தகத்தை பார்த்து தேர்வு எழுதலாம்: சி.பி.எஸ்.இ புதிய முடிவு

புதுடெல்லி, ஆக. 11– 2026–27ம் கல்வி ஆண்டு முதல் 9ம் வகுப்புக்கு, புத்தகத்தைப் பார்த்து தேர்வு எழுதும் முறையை சி.பி.எஸ்.இ. அறிமுகம் செய்கிறது.

மத்திய இடை நிலை கல்வி வாரியமான சி.பி.எஸ்.இ. மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. 2026ம் ஆண்டு முதல் 10ம் வகுப்பு பொதுத் தேர்வுகளை ஆண்டுக்கு இருமுறை நடத்த முடிவு செய்து இருந்தது.

இந்த நிலையில் மாணவர்களின் தேர்வு பயத்தைப் போக்கும் வகையில், புத்தகத்தைப் பார்த்து தேர்வு எழுதும் முறையை சி.பி.எஸ்.இ. அறிமுகம் செய்ய திட்டமிட்டுள்ளது.

வரும் 2026–27ம் கல்வி ஆண்டு முதல் 9ம் வகுப்புக்கு, இந்த முறை அறிமுகம் செய்யப்பட உள்ளது. மொழிப்பாடங்கள், கணிதம், அறிவியல், சமூக அறிவியல் பாடங்களுக்கான தேர்வுகளை மாணவர்கள் புத்தகத்தைப் பார்த்து எழுதலாம் என சி.பி.எஸ்.இ. தெரிவித்துள்ளது. ஏற்கனவே நாடு முழுவதும் பல்வேறு சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் 2023ம் ஆண்டு முதல் சோதனை முறையில் பொதுத்தேர்வு தவிர்த்து மற்ற தேர்வுகளை 9ம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரை, புத்தகம் பார்த்து எழுதும் முறை நடைமுறையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

திருப்பூர் மாவட்டத்திற்கு 7 புதிய அறிவிப்புகள்

உடுமலைப்பேட்டை, ஆக.11– உடுமலைப்பேட்டையில் நடந்த அரசு விழாவில் திருப்பூர் மாவட்டத்திற்கு 7 புதிய அறிவிப்புகளை முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார்.

1. பரம்பிக்குளம் ஆழியாறு பாசன திட்டத்தின் அடுத்த கட்டமான, நீராறு நல்லாறு மற்றும் ஆனைமலையாறு திட்டமானது, திருப்பூர் மற்றும் கோவை மாவட்ட விவசாயிகளின் நீண்டகால கோரிக்கையாக இருந்து வருகிறது. அதை செயல்படுத்த, கேரள மாநில அரசிடம் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். நம்முடைய விவசாயிகளின் இந்த கனவுத் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும்.

2. பரம்பிக்குளம் ஆழியாறு பாசன திட்ட பாசனப்பகுதியில், பல வாய்க்கால்கள் நீண்டகாலமாக தூர்வாரப்படாமல் இருப்பதாக பாசன சங்கத் தலைவர்களும் விவசாயிகளும் என்னிடம் சொன்னார்கள். அவர்கள் கோரிக்கையை ஏற்று, வாய்க்கால்களை தூர்வாரும் பணிகளுக்காக இந்த ஆண்டே 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

3. திருப்பூர் மாநகரத்தில், மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு பயனளிக்கின்ற வகையில், நவீன வசதிகளுடன் கூடிய மாவட்ட மைய நூலக கட்டடம் 9 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். திருப்பூர் மாநகராட்சி அமர்ஜோதி கார்டன் பகுதியில், பல்நோக்கு விளையாட்டு அரங்கம் 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

4. காங்கேயம் ஊராட்சி ஒன்றியத்தில் குடிநீர் வழங்கலை மேம்படுத்த, பரஞ்சேர்வழி சிவன்மலை, கீரனூர் ஊராட்சிகளில் 11 கோடி ரூபாய் செலவில் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

5. தாராபுரம் வட்டத்தில் இருக்கின்ற வேளாண் பெருமக்கள் பயன்பெறும் வகையில், நஞ்சியம்பாளையம் அருகே உப்பாற்றின் குறுக்கே, 7 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய தடுப்பணை கட்டப்படும்.

6. ஊத்துக்குளி வட்டத்தில் ஆறரை கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய வெண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கப்படும்.

7.உடுமலைப்பேட்டை பகுதியில் இருந்து சட்டத் துறை அமைச்சராக பதவி ஏற்று, உடுமலைப்பேட்டை அரசு கல்லூரி அமைக்க 25 ஏக்கர் நிலம் வழங்கியவருமான எஸ்.ஜே. சாதிக் பாட்சாவின் பெயரில், தாஜ் தியேட்டர் அருகில் இருக்கக்கூடிய சாலைக்கு அவருடைய பெயர் சூட்டப்படும். இதுமட்டுமல்ல, இன்று காலை அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை செயல்படாமல் இருப்பதை சுட்டிக்காட்டி, விவசாயிகள் என்னிடத்தில் மனு அளித்தார்கள். அது குறித்து, ஆராய்ந்து, பரிந்துரை வழங்க விரைவில் ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

சிந்து நதியில் இந்தியா அணை கட்டினால் தகர்ப்போம்: பாகிஸ்தான் ராணுவ தளபதி

வாஷிங்டன், ஆக. 11– சிந்து நதியில் இந்தியா அணை கட்டினால், அதனை 10 ஏவுகணைகள் கொண்டு தகர்ப்போம் என்று அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் ராணுவ தலைமைத் தளபதி சையத் ஆசிம் முனீர் இன்று தெரிவித்தார்.

பகல்ஹாம் தாக்குதல் சம்பவத்திற்கு பிறகு, பாகிஸ்தானுக்கு இந்தியா பல்வேறு வழிகளில் பதிலடி கொடுத்து வருகிறது. அந்த வகையில் பாகிஸ்தானுடனான சிந்து நதிநீர் பகிர்வு ஒப்பந்தத்தை ரத்து செய்தது.

இந்த நிலையில் ஆபரேஷன் சிந்தூருக்கு பிறகு கடந்த 2 மாதத்தில் 2வது முறையாக அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் ராணுவ தளபதி, அந்நாட்டின் பல்வேறு தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். தற்போது இந்தியா – அமெரிக்கா இடையே வர்த்தக ரீதியிலான மோதல் நடைபெற்று வரும் நிலையில், பாகிஸ்தான் ராணுவ தளபதியின் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

டம்பாவில் சென்ட்காம் தளபதி ஜெனரல் மைக்கேல் குரில்லாவின் ஓய்வு விழா மற்றும் புதிய தளபதி அட்மிரல் பிராட் கூப்பரின் பொறுப்பேற்பு விழாவில் ராணுவ தளபதி ஆசிம் முனீர் கலந்துகொண்டார். அப்போது பேசிய அவர், 'இந்தியாவிடமிருந்து அச்சுறுத்தல் ஏற்பட்டால், உலகின் பாதியை அழித்துவிடுவோம்' என்று எச்சரித்துள்ளார். இது உலக நாடுகளிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதனிடையே அமெரிக்க வாழ் பாகிஸ்தானியர்களுடன் ஆசிம் முனீர் நேற்று கலந்துரையாடினார். அப்போது அவர் பேசுகையில்,

''சிந்து நதியில் இந்தியா அணை கட்டும் வரை நாம் காத்திருப்போம், அணை கட்டியவுடன் அதனை 10 ஏவுகணைகளால் தகர்ப்போம். எங்களிடம் ஆயுதப் பற்றாக்குறை ஏதுமில்லை என ஆசிம் முனீர் பேசியதாக பாகிஸ்தான் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளன.

எதிர்க் கட்சிகள் கடும் அமளி: இரு அவைகளும் ஒத்திவைப்பு

புதுடெல்லி, ஆக. 11– பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் செய்வதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சியினர் கடும் அமளியில் ஈடுபட்டனர். இதனால் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் மதியம் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டன.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் கடந்த ஜூலை 21ம் தேதி தொடங்கியது. வரும் ஆகஸ்ட் 21ம் தேதி வரை கூட்டத்தொடர் நடைபெறுகிறது. கூட்டத்தொடரில் பல முக்கிய மசோதாக்களை நிறைவேற்ற, மத்தியில் ஆளும் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு திட்டமிட்டுள்ளது. நாடாளுமன்றம் துவங்கியதிலிருந்து எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அமளியில் ஈடுபட்டதால் இருஅவைகளிலும் அலுவல்கள் நடக்காமல் முடங்கி வருகிறது.

இந்நிலையில் 16 வது நாளான இன்று நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் வழக்கம்போல் கூடின.

மக்களவையில் வழக்கமான அலுவல்கள் இன்று காலை தொடங்கியதும், எதிர்க்கட்சிகள் பல்வேறு விவகாரங்களை எழுப்பி கடும் அமளியில் ஈடுபட்டனர். சபாநாயகர் ஓம் பிர்லா எதிர்க்கட்சி எம்.பி.க்களை பலமுறை எச்சரித்தார். அவை நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன. மக்களின் வரிப்பணம் வீணாகிறது. எம்.பி.க்கள் அவை நடவடிக்கைக்கு இடையூறு செய்யக்கூடாது என்று சபாநாயகர் வலியுறுத்தினார்.

ஆனாலும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால், அவையை மதியம் 2 மணி வரை ஒத்திவைத்து உத்தரவிட்டார். அதேபோல் மாநிலங்களவையிலும் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டனர். இதன் காரணமாக அவை மதியம் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. இதனால் இருஅவைகளும் தொடர்ந்து செயல்படாமல் முடங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

வாய்க்காலில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்த 2 சிறுவர்கள் குடும்பத்துக்கு தலா ரூ.3 லட்சம் நிதி: ஸ்டாலின் உத்தரவு

சென்னை, ஆக.11– திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், நேரு நகர் பி.ஏ.பி. வாய்க்காலில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்த 2 சிறுவர்களின் பெற்றோர்களுக்கு தலா 3 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:–

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், பெரியகோட்டை கிராமம், ஸ்ரீமாரியம்மன் நகரைச் சேர்ந்த தினேஷ்குமார் என்பவரின் மகன் மணிகண்டன் பிரபு (வயது 13) மற்றும் காமராஜ் நகரைச் சேர்ந்த ராமச்சந்திரன் என்பவரின் மகன் மோகன் பிரசாத் (வயது 13) ஆகிய இரண்டு சிறுவர்கள் நேற்று முன்தினம் (9–ந் தேதி) மாலை உடுமலைப்பேட்டை வட்டம், நேரு நகர், பி.ஏ.பி. வாய்க்காலில் குளிக்கக் சென்றபோது எதிர்பாராதவிதமாக நீரில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் நேற்று (10–ந் தேதி) காலை பெரியகோட்டை கிராமம், சித்தகோட்டை பகுதியில் சிறுவன் மணிகண்டன் பிரபு என்பவரின் உடலும், உடுமலைப்பேட்டை வட்டம், ஒட்டமடம் வாய்க்கால் பாலம் பகுதியில் சிறுவன் மோகன் பிரசாத் என்பவரின் உடலும் இறந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த 2 சிறுவர்களின் பெற்றோர்களுக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோர்களுக்கு தலா 3 லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் திடீர் தீ

புதுக்கோட்டை, ஆக.11– புதுக்கோட்டை மாவட்டம் கணேஷ் நகர் காவல் சரகத்திற்கு உட்பட்ட புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரியில் உள்ள எச்டியு (உயர் சார்பு பிரிவு) 20 படுக்கைகள் கொண்டு செயல்பட்டு வந்தது. கடந்த இரண்டு நாட்களாக நோயாளிகள் யாரும் இல்லை. இந்த நிலையில் ஒரு இயந்திரம் மட்டும் ஊழியர்களால் ஆன் செய்யப்பட்ட நிலையிலேயே இருந்துள்ளது.

இதன் காரணமாக இன்று அதிகாலை 4.30 மணிக்கு ஒரு வெண்டிலேட்டர் திடீரென தீப்பற்றி எரிந்தது. இதனால், வார்டு முழுவதும் புகை சூழ்ந்து பாதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், நோயாளிகள் மற்றும் பொதுமக்களுக்கு காயங்கள் மற்றும் பாதிப்புகள் ஏதும் ஏற்படவில்லை.

கே.கே.வி அக்ரோ பவர்ஸ் லிமிடெட்

CIN: L40108TZ2012PLC018332

பதவு அலுவலகம்: விவாகா பில்டிங், எண். 637, ஒப்பணக்கார வீதி, கோயம்புத்தூர், தமிழ்நாடு 641001

மின்னஞ்சல்: cs@kkvagropowers.com

தொலைபேசி எண்: 7418598886, 0422-6800000

இணையதளம்: www.kkvagropowers.com

13வது வருடாந்திர பொதுக் கூட்டம் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு அறிவிப்பு

இந்த அறிவிப்பு மூலம் தெரிவிப்பதாவது:

1. பெருநிறுவன விவகார அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட பொது சுற்றறிக்கைகளின்படி. M/s. கே.கே.வி அக்ரோ பவர்ஸ் லிமிடெட்டின் (CIN: L40108TZ2012PLC018332) உறுப்பினர்களின் 13வது வருடாந்திர பொதுக் கூட்டம், செப்டம்பர் 2, 2025 செவ்வாய்க்கிழமை காலை 11:00 மணிக்கு, காணொலி காட்சி / பிற ஆடியோ காட்சி வழிமுறைகள் மூலம், விவிவாகா பில்டிங், எண். 637, ஒப்பணக்கார வீதி, கோயம்புத்தூர், தமிழ்நாடு 641001ல் அமைந்துள்ள நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் நடைபெறும்.
2. 13வது வருடாந்திர பொதுக் கூட்டம் மற்றும் 2024-25 நிதியாண்டுக்கான வருடாந்திர அறிக்கையின் மின்னணு பிரதிகள், 08.08.2025 அன்று நிறுவனத்தில் பதிவுசெய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிகளைக் கொண்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன, மேலும் அனுப்பும் பணி 11.08.2025 அன்று நிறைவடைந்துள்ளது.
3. தீர்மானங்களின் மீது பங்குதாரர்கள் வாக்களிக்க தொலைதூர மின்னணு வாக்களிப்புக்கான வசதியை வழங்குவதில் நிறுவனம் மகிழ்ச்சியடைகிறது.
4. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு காலம் 30.08.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 09:00 மணிக்கு தொடங்கி 01.09.2025 செவ்வாய்கிழமை மாலை 05:00 மணிக்கு முடிவடைகிறது. அதன் பிறகு வாக்களிப்பதற்காக தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு தொகுதி NSDL ஆல் முடக்கப்படும்.
5. பதிவு தேதி (கட் ஆஃப் தேதி) அதாவது 26.08.2025 அன்று உறுப்பினர்கள் / பலன்பெறும் உரிமையாளர்களின் பதிவேட்டில் பெயர்கள் இடம் பெற்றுள்ள உறுப்பினர்கள், கட் ஆஃ தேதியன்று நிறுவனத்தின் செலுத்தப்பட்ட சம பங்கு மூலதனத்தில் தங்கள் பங்கிற்கு ஏற்ப மின்னணு முறையில் வாக்களிக்கலாம்.
6. வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவுக்கான விரிவான வழிமுறைகள் RTAஆல் வெளியிடப்பட்ட வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்புடன் இணைக்கப்பட்டுள்ளன.
7. அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு பங்குகளை வாங்கி நிறுவனத்தின் உறுப்பினராகும் எந்தவொரு நபரும் cs@kkvagropowers.com அல்லது enotices@in.mpms.mufg.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு கோரிக்கையை அனுப்பி உள்நுழைவு ஐடி மற்றும் கடவுச்சொல்லைப் பெறலாம்.
8. உறுப்பினர்கள் பின்வருவனவற்றைக் கவனத்தில் கொள்ளவும்:

a. 01.09.2025, செவ்வாய்க்கிழமை மாலை 05:00 மணிக்கு மேல் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அனுமதிக்கப்படாது.

b. 13வது வருடாந்திர பொதுக் கூட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு வசதி செய்யப்படும். கூட்டத்தில் கலந்து கொண்ட மற்றும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதி மூலம் வாக்களிக்காத பங்குதாரர்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு வசதி கிடைக்கும். கூட்டத்தின் நடவடிக்கைகள் முடிந்த பிறகு 15 நிமிடங்கள் மின்னணு வாக்குப்பதிவு வசதி திறந்திருக்கும்.

c. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் தனது வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்திய பிறகும் ஒரு உறுப்பினர் பொதுக் கூட்டத்தில் பங்கேற்கலாம், ஆனால் கூட்டத்தில் மீண்டும் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார்.

d. கட் ஆஃப் தேதியின்படி உறுப்பினர்களின் பதிவேட்டிலோ அல்லது வைப்புத்தொகையாளர்களால் பராமரிக்கப்படும் பயனாளிகளின் பதிவேட்டிலோ பெயர் பதிவு செய்யப்பட்ட ஒரு நபர் மட்டுமே தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் பொதுக் கூட்டத்தில் வாக்களிக்கும் வசதியைப் பெற உரிமையுடையவர்.

9. கூட்டத்தின் அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை நிறுவனத்தின் இணையதளம் www.kkvagropowers.com மற்றும் பங்குச் சந்தையின் இணையதளம் www.nseindia.comல் கிடைக்கிறது.
10. ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின் அது குறித்து பங்குதாரர்கள் நிறுவனத்தின் செயலாளர் மற்றும் இணக்க அதிகாரி சி.எஸ். காவ்யா தாஸ் ஆர் அவர்களுக்கு cs@kkvagropowers.com என்ற மின்னஞ்சல் முகவரி அல்லது விவாகா பில்டிங், எண். 637, ஒப்பணக்கார வீதி, கோயம்புத்தூர், தமிழ்நாடு 641001 என்ற முகவரிக்கு எழுதலாம் அல்லது 0422-6800000 என்ற தொலைபேசி எண்ணில் அழைக்கலாம்.

கே.கே.வி அக்ரோ பவர்ஸ் லிமிடெட் சார்பாக

11.08.2025 சிஎஸ் காவ்யா தாஸ் ஆர்.

கோயம்புத்தூர் நிறுவன செயலாளர் மற்றும் இணக்க அதிகாரி